எங்கள்

# இளந்தளிர்கள்!

தை-மாசி 1998



நாம் வாழத் தமிழ் வாழும். தமிழ் வாழ நாம் வாழ்வோம்.

இளையோர்க்கான
பிரத்தியேக இணைப்பு

பூவரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி.

சுத்த மடையர் சொல்லைக் கேட்டுச்
செத்து மடியா திருக்கக் கல்வி

ஞாலம் கல்விப் பயனால் நடக்கும்
காலம் கெடினும் கல்வியைக் கைவிடேல்

மடைமை மறையும் அடிமையும் மடியும்
கடனைப் பட்டுங் கற்றுக் கண்விழி

போட்டி பூசல் பொறாமை கெட்டுக்
கூட்டு நட்புக் குலவக் கல்வி

பரந்த மனமும் சிறந்தபண்பும்
விரிந்த கொள்கையும் விளங்கக் கல்வி

சூழலுக் கேற்ற சுதந்திரக் கல்வியும்
தோழமைக் கல்வியும் ஆளுமை துலக்கும்

உற்ற கல்விக் குதவிகள் செய்வார்
பெற்ற பிறவிப் பயன்களைப் பெற்றார்.

-கவிஞர்.வி.கந்தவனம்
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான தம்பி தங்கைகளே!

உங்கள் திறமையைப் பரிசோதிக்க இந்த இதழிலும் 4 போட்டிகள் இடம்பெறுகின்றன. இந்தப் போட்டிகளுக்கான உங்கள் விடைகளை எழுதி 20.02.98க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக

Poovarasu
Sinniah Maheswaran,
Otto Brenner Allee 56,
28325 Bremen,
Germany.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்!



போட்டி எண்: 1

இந்தப் படத்திலுள்ள மனிதரின் வயது அவரது உடம்பிலேயே உள்ளதாம். எண்களைக் கூட்டி அவரது வயதைக் கண்டுபிடியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போட்டி எண்: 2

இங்குள்ள வண்ணத்துப்பூச்சிகளில் ஒன்றுமட்டும் மற்றவைகளிலிருந்து வித்தியாசப்படுகிறது. அது எத்தனையாவது இலக்க வண்ணத்துப்பூச்சி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லொழுக்கம்

அம்மா அப்பா சொற்கேட்போம்
நாம் அறிஞர்களாய் வாழ்ந்திடுவோம்.
ஆடி ஓடி விளையாடி
நாம் ஆரோக்கியமாய் வாழ்ந்திடுவோம்.
இனிமையாகப் பேசியே
இன்பமாக வாழ்ந்திடுவோம்.
ஈகை செய்யப் பழகிடுவோம்
ஈனர்கள் சொல்லை தட்டிடுவோம்.
உண்மை பேசி நடந்திடுவோம்
உற்றாரை நாம் மதித்திடுவோம்.
ஊக்கமுடன் நாம் படித்திடுவோம்
ஊருக்காக உழைத்திடுவோம்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனக் கொள்வோம்
என்றும் அறிவை வளர்த்திடுவோம்.
ஏற்றத் தாழ்வை. மறந்திடுவோம்
ஏற்றமுடன் நாம் வாழ்ந்திடுவோம்.
ஐக்கியத்தைக் கடைப்பிடிப்போம்.
ஒப்புயர்வற்ற நம் தமிழ்மொழியை
ஒவ்வொரு நாளும் கற்றிடுவோம்.
ஓய்வு ஒழிச்சல் இன்றியே
படித்து அறிவை வளர்த்திடுவோம்.

**அசோக் குலதாசன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீச்சல் பழகு.

வெள்ளம் எங்கும் மெள்ளப் பெருகி
பள்ளம் நிறைந்து வெள்ளம் பாயும்
நெல்லு வயலும் நீரால் நிறைய
நல்லவாவி போலத் தோன்றும்
சின்னஞ்சிறிய சிவப்புக்கோழி
வாழைத்தண்டில் வள்ளம் செய்து
தன்னந்தனியே போகும்போது
வள்ளம் கவிழ்ந்து உள்ளம்நொந்தாள்.
வெள்ள நீரில் சிவப்புக்கோழி
திக்கு முக்குப் பட்டுக்கத்த
உள்ளம் நொந்த வாத்து அம்மாள்
மெள்ள நீந்திக் கரையில் விட்டாள்.
துள்ளி நீச்சல் பழகவேணும்
துணிந்து நீரில் இறங்கமுன்னே!

-சிவஞ்ஜீவ் சிவராம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கும் ஆமையும்.

ஒரு குளத்தில் ஆமை வசித்து வந்தது.
அங்கே இரண்டு கொக்குகள் இரைதேடி வருவன.
கொக்குகளிடம் ஆமை கேட்டது.
"நண்பர்களே! இந்தக் குளம் மிகவும் சிறியதாக இருக்கின்றது. நான் வேறு இடத்திற்குப் போக விரும்புகின்றேன். எனக்கு உங்களால் உதவ முடியுமா?" என்று தினமும் தொந்தரவு கொடுத்து வந்தது.
ஆமையின் தொந்தரவை சகிக்க முடியாத கொக்குகள் ஒரு முடிவுக்கு வந்தன. ஒரு கொக்கு குச்சியை எடுத்து வந்து ஆமையிடம், "நாங்கள் உன்னை வேறு குளத்திற்கு சேர்க்கும்வரை வாயே திறக்கக்கூடாது!" என்று சம்மதப் வாங்கிக் கொண்டது.
"நண்பரே! இந்த குச்சியின் நடுவே இறுக்கமாக கௌவிச் கொள்ளுங்கள் என்று கூறி இரண்டுகொக்குகளும் குச்சியின் நுனியில் கௌவிக்கொண்டு பறந்தன.
வானவீதியில் பறந்துகொண்டு இருக்கும்போது ஆமை பூமியை உற்றுப் பார்த்தது. "ஆகா பூமி எவ்வளவு அழகாய் இருக்கின்றது!" என்று தன் மனதினுள் நினைத்தது. இதை எப்படியாவது கொக்குகளிடம் சொல்லவேண்டும் என்று ஆவலோடு வாயைத்திறந்தது. அவ்வளவுதான் .ஆமை கீழே விழுந்து இறந்துபோனது. அந்த ஆமைக்காக இரண்டு கொக்குகளும் கண்ணீர் விட்டு அழுதன. உள்ளதே போதுப் என்று வாழ்வது நல்லதல்லவா?



-கஜிநாத் தவம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழித்திடுங்கள்.

அன்புத்தம்பி தங்கைகளே
அழகாய்ப் பிறந்த முத்துக்களே!
பண்பும் பரிவும் பாசமுமே
பதிவாய் வைப்பீர் மனதினிலே
தங்கையும் நீயும் தங்கங்கள்
தரத்தில் உயர்ந்த வைரங்கள்
இங்கேன் சண்டை போடுகிறீர்?
இருப்பவர் பார்த்தால் நகைப்பாரே!
விட்டுக்கொடுக்கும் மனமிருந்தால்
வேம்பும் கரும்பின் சுவையாகும்.
பட்டுப்போன்றது உன்மனமே!
பாசிபடரவே வைக்காதே!
காலை எழுந்ததும் பல்துலக்கிக்
கடவுளைக் கும்பிட மறக்காதே!
நாளை நல்ல பொழுதாக்க
நாடு அவன் அருளைக் குறைக்காதே!

-கே.ஜர்த்தின்னா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவர் திருநாள்.

உழவர் பயிர்செய்வதற்கு மழையும் வேண்டும் வெயிலும் வேண்டும். அவை பணச் செலவின்றிக் கிடைக்கும் நன்மைகள்.
ஆம்! அவை சூரியனாலே கிடைக்கும் நன்மைகள். ஒருவர் நன்மைசெய்தால் அதை மறக்கக்கூடாது. 'நன்றிமறப்பது நன்றன்று'. ஆகவே உழவர் தமக்கு நன்மைசெய்த சூரியனுக்கு நன்றிசெலுத்துகின்றனர். அவர்கள் நன்றிசெலுத்தும் நாளே தை மாதத்து முதல்நாள். தைப்பொங்கல் நாள் ஆகும்.
ஆம்! அதுதான் உழவர் திருநாள்.
தையிலே பெரும்பாலும் நெல்விளைந்துவிடும். கரும்பு முற்றிவிடும்.
கிழங்குவகைகள் விளைந்துவிடும். ஏனைய பயிர்களும் பயன்தரத் தொடங்கிவிடும்.
பொங்கல் இடுவதற்கு இவைவேண்டும். அதனால் தைமாதத்து முதல்நாளில் உழவர் தைப்பொங்கலைக் கொண்டாடுகின்றனர்.
அந்நாளிலே முற்றத்தில் மாவினால் கோலம்போட்டு, அடுப்பு வைத்துப் புதுப் பானையில் பொங்கல்பொங்கி சூரியனுக்குப் படைக்கின்றனர். அந்நாளை இந்துமக்கள் திருநாளாகக் கொண்டாடுகின்றனர்.
தைப்பொங்கல் உழவர் திருநாள் என்றாலும் அதைத் தொழிலாளர்கள் வியாபாரிகள்,உத்தியோகத்தர்கள் ஆகிய எல்லோரும் கொண்டாடுகின்றார்கள்.
இவர்கள் அனைவரும் கொண்டாடுவதற்குக் காரணம் உண்டு.
உழவர்கள் தாம் நடும் பயிர்கள் வளர்ந்து அறுவடை செய்யும்மட்டும் இரவு பகலாக வெயிலையும் மழையையும் பாராமல் உழைக்கிறார்கள்.
அந்த உழவர்களின் கால் சேற்றில் படவில்லையென்றால் இந்த உலகத்தில் மக்கள் வாழவேமுடியாது. மக்கள் உயிர்வாழ உணவுவேண்டும். அந்த உணவை உண்டாக்கித் தருகிறவர்கள் உழவர்கள். உழவுத்தொழிலுக்கு வேண்டிய வெயிலையும் மழையையும் தருகிறவன் சூரியன். அந்த உழவருக்கும் சூரியனுக்கும் நன்றி செலுத்துவதற்காக மற்றையவர்களும் உழவர் திருநாளைக் கொண்டாடுகிறார்கள்.
உழவர்திருநாளுக்கு அடுத்தநாள் உழவுமாடுகளுக்கும் நன்றி செலுத்துவதற்காக பட்டிப்பொங்கல் அல்லது மாட்டுப்பொங்கல் செய்வார்கள். அன்றையதினம் மாடுகளைக்குளிப்பாட்டி பட்டிகளிலே பொங்கல்வைத்து வடை, வாழைப்பழம், பொங்கல் ஆகியவற்றைப் படைத்து வணங்குவார்கள். இதுவே மாட்டுப்பொங்கலாகும்.

-ஆனந்த் குலதாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூவரசு 7வது ஆண்டு நிறைவையொட்டி
## எங்கள் இளந்தளிர்களுக்கிடையே நடாத்தப்
## சிறப்புப் போட்டிகள்.

பரிசுபெறுபவர்கள் விபரம்:

போட்டி எண்:1
வர்ணம் தீட்டுதல்:

முதற்பரிசு:
செல்வி தயாளினி நடராஜா

இரண்டாவது பரிசு:
செல்வன் கஜிநாத் தவம்

மூன்றாவது பரிசு:
செல்வி கார்த்திகா ஆனந்தராஜா

ஆறுதல் பரிசு:
செல்வன் சிவஞ்ஜீவ் சிவராம்.


போட்டி எண்: 2
உறுப்பெழுத்து.

முதற்பரிசு:
செல்வன் பிரசன்னா குணராஜன்

இரண்டாவது பரிசு:
செல்வன் அசோக் குலதாசன்

மூன்றாவது பரிசு:
செல்வன் பார்த்திபன் சத்தியநாதன்

ஆறுதல்பரிசு:
செல்வி தயாளினி நடராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற



போட்டி எண்: 3
கட்டுரைப்போட்டி
"அறம் செய்ய விரும்பு"

முதற்பரிசு:
செல்வன் றமணராஜா செல்வரத்தினம்.

இரண்டாவது பரிசு:
செல்வன் ஆனந்த் குலதாசன்

மூன்றாவது பரிசு:
செல்வன் சிவஞ்ஜீவ் சிவராம்

போட்டி இல:4
குறுக்கெழுத்துப்போட்டி!

குறுக்கெழுத்துப்போட்டியில் பரிசுபெறுபவர்கள்
பூவரசு 7வது ஆண்டு நிறைவு விழாவன்று
தெரிவுசெய்யப்படுவார்கள்.
இவர்களைப்பற்றிய விபரங்கள் அடுத்த 'இளந்தளிர்களி'ல்
வெளியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாள்.

எந்தன் பிறந்தநாள் நேற்றுச்
சொந்தக்காரர் எல்லோரும்
வந்து வந்து பரிசுபல
தந்து தந்து வாழ்த்தினரே!

காலையில் அம்மா அப்பாவுடன்
கடவுளைக் கும்பிடக் கோயில் சென்றேன்
மாலையில் வீட்டில் கொண்டாட்டம்
மாலைகள் பலூன்கள் சோடனைகள்!

மாமா மாமி அம்மம்மா
வாழ்த்திய வண்ணம் வந்தார்கள்
பாமினி மச்சாள் பரிசாகப்
பாட்டுப் புத்தகம் கொண்டு வந்தாள்!

பெரியப்பாவும் பிள்ளைகளும்
பெரியம்மாவும்கூட வந்தார்
சரிகைச் சட்டையும் சங்கிலியும்
தந்து தூக்கி முத்தம் இட்டார்!

சித்தப்பா படக் கருவியுடன்
சேர்ந்தார் வந்து சிரித்தபடி
லத்தி நூர்க்கும் நேரத்திலே
வாழ்த்து யாவரும் பாடினரே!

'வாழ்க இன்று பிறந்தநாள்
வல்லமை வளங்கள் நிறைந்தநாள்
வாழ்க இதுவே சிறந்தநாள்
மகிழ்ந்து வளர்ந்து வாழ்கவே!'

என்றே பாடி வாழ்த்துகையில்
நானும் கேக்கை வெட்டிவிட்டேன்
நன்றாம் கேக்கும் சாப்பாடும்
நன்றாம் நன்றாம் பிறந்ததினம்!

-மதுரகவி வி.கந்தவனம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூவரசை வாழ்த்துகிறோம்!

நாவுக்கு ஓர் அரசு திருநாவுக்கரசு
கலைக்கு ஓர் அரசு கலையரசு
இனிய தமிழுக்கு ஓர் அரசு பூவரசே!
நீ வாழிய என்றும் எங்களுடன்!

நீ இருதிங்கள்ஒருமுறை உற்சாகமூட்டுகின்றாய்
நீ எங்கள் நெஞ்சங்களில் நிலைத்துவிட்டாய்
நீ எங்களை இலக்கிய சுரங்கத்தில் இறக்கிவிட்டாய்
இனிய தமிழுக்கு ஓர் அரசு பூவரசே!
நீ வாழிய என்றும் எங்களுடன்!

நீ எங்களுக்காக எண்பத்து நான்கு திங்களை
அர்ப்பணித்துவிட்டாய்
நீ எங்களுக்காக உலக முடிவில் திங்களுக்கே செய்வாய்!
நீ எங்களுக்காக கிளைகள் படர்ந்து பூத்துக் குலுங்கிடுவாய்!
இனிய தமிழுக்கு ஓர் அரசு பூவரசே!
நீ வாழிய என்றும் எங்களுடன்!


இனிய பூவரசே எங்களுக்காக இளந்தளிரானாய்
இனிய பூவரசே எங்களுக்காக மழலைப் பருவத்தையடைந்தாய்!
இனிய பூவரசே எங்களுக்காக தேன்தமிழுக்கு ஆணிவேரானாய்!
இனிய தமிழுக்கு ஓர் அரசு பூவரசே!
நீ வாழிய என்றும் எங்களுடன்!

இனிய பூவரசின் பூங்காப் பூக்களே நீடுழிவாழ்க!
இனிய பூவரசின் கற்பனைக் கரும்புகளே நீடுழி வாழ்க!
இனிய தமிழுக்கு ஓர் அரசு பூவரசே!
நீ வாழிய என்றும் எங்களுடன்!

என்றும் உங்களுடன்
ரெனேவர் தமிழாலய மாணவ மாணவியர்
(பிறேமன், ஜேர்மனி)

ஆக்கம்: பருத்தித்துறையான் சேகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யானையும் முயலும்.

அது ஓர் அடர்ந்த காடு.
அதில் யானைக்கூட்டங்கள் மிக உல்லாசமாக வாழ்ந்து வந்தன. திடீரென அவ்வருடம் கோடையில் கடும் வரட்சி ஏற்பட்டது. ஆறுகுளம் மற்றும் நீர் நிலைகளிலுள்ள நீர் யாவும் வற்றிவிட்டன. நிலம் வரண்டு எங்கும் ஒரே புழுதிமயம். மரம் செடி கொடிகள் யாவும் நீரின்றி வாடி நின்றன. பறவைகள் யாவும் நீரைத்தேடி பல்வேறு இடங்களுக்குப் பறந்துசெல்லத் தொடங்கிவிட்டன.
அந்த யானைக்கூட்டமோ நீரின்றி தாகமேலிட்டால் அங்கும் இங்கும் அலைந்து திரிந்தன. இறுதியில் அவை யாவும் ஒருமுடிவுக்குவந்தன. அந்த யானைக்கூட்டத்தின் தலைவன் தனது பரிவாரங்களை அழைத்து நீங்கள் நான்கு பிரிவாகப் பிரிந்து நாற்புறமும் சென்று நீர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து வாருங்கள் என்று கட்டளை இட்டது.
அவ்விதமே அந்த யானைக்கூட்டங்கள் நான்காகப்பிரிந்து நாற்புறமும் நீர் இருக்கும் இடம்தேடிப் புறப்பட்டன. வெகுநாட்கள் காட்டில் அலைந்து திரிந்து நீர்நிலை ஏதும் கண்களில் தென்படாததால் மனம் சோர்ந்து தம் இருப்பிடம் திரும்பின. ஆனால் ஒரேஒரு யானைமட்டும் மனம் சோராது மேலும் காட்டில் பல இடங்களிலும் நீர்தேடி அலைந்து திரிந்தது.
இறுதியாக வடக்குத் திசைநோக்கி சென்று கொண்டிருக்கையில் அது ஓர் நீர்த்தடாகத்தைக்கண்டது. அழகிய சோலையொன்றின் நடுவே அந்தத் தடாகம் இருந்தது. சுற்றிவர மரஞ்செடி கொடிகளிலிருந்த மலர்கள் நறுமணம்பரப்பிக்கொண்டிருந்தன. தாகம் மிகக் கொண்ட அந்த யானை விரைந்துசென்று தனது தும்பிக்கையால் நீரை உறிஞ்சி வயிறாறக் குடித்தது. பின்னர் அங்கிருந்து மீண்டு தனது அரசனிடம் செய்தியைச் சொல்ல விரைந்து சென்றது.
யானை அரசன் செய்தியைக் கேட்டு மனம் மிக மகிழ்ந்தது.
தனது கூட்டத்தினரோடு விரைந்து புறப்பட்டு நீர் நிலை நோக்கிச் சென்றன. சற்றுத் தொலைவில் செல்லும்பொழுதே தடாகத்தில் இருந்த நீரை கண்ட







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யானைகள் ஒன்றுடன் ஒன்று முட்டிமோதிக்கொண்டு விரைந்து தடாகத்தில் இறங்கி நீரைப்பருகின.
அந்தச் சோலையில் முயற்கூட்டமொன்று தனது சுற்றப் சொந்தமுடன் ஆனந்தமாக வாழ்ந்து வந்தன. நீரைச் கண்ட யானைகள் தடாகத்தை நோக்கி விரைந்து செல்லும்பொழுது பலமுயல்கள் யானையின் கால்களில் அகப்பட்டு அகப்பட்டு நசுங்கி மாண்டன. இன்னும் சில அங்கவீனர்களாயின.
நீரைப்பருகி தாகம் தணிந்தபின் யானைகள் மீண்டும் தம் இருப்பிடம் நோக்கிச் சென்றன.
பாதிக்கப்பட்ட முயற்கூட்டங்கள் ஒரு மரத்தடியில் ஒன்று கூடின. தமதுஇனத்தில் உயிர்துறந்தவர்களுக்காக சிறிது நேரம் அழுதன. எஞ்சியவர்களில் பலர் அங்கவீனர்களாக இருப்பதைப் பார்த்ததும் அவற்றிற்கு யானைச் கூட்டத்தின் மீது ஆத்திரம் ஏற்பட்டது. "யானைகள் மீண்டும் நீர் அருந்த வந்தால் எமது கூட்டமே அழிந்து விடும். யானையோ மிருகங்களில் உருவத்தில் பெரியது சிறுமுயல்களாகி எம்மால் என்ன செய்யமுடியும்?" என்று மனம் கலங்கிநின்றன.
இறுதியில் முயற் கூட்டத்திலிருந்த புத்திசாலியான குட்டிமுயல் ஒன்று "இந்த யானைகளுடன் நேருக்கு நேர் மோதினால் எம்மால் வெல்லமுடியாது.இவற்றை நாம் தந்திரமாகத்தான் வெல்லவேண்டும். ஆகவே இதற்கு நான்ஒரு யுக்திவைத்திருக்கிறேன் அதன்படி அந்த யானைகளிடம் நான் தூதுவனாகச் செல்கின்றேன்." என்று கூறியது.
இதனைக் கேட்ட மற்றைய முயல்கள் பயந்து நடுங்கின. "ஐயோ அந்த இராட்சத யானைக்கூட்டத்திடம் தன்னந் தனியனாக நீசென்று திரும்பிவருவாயா? என்று புலம்பின. "கவலைப்படாதீர்கள் என் உடன்பிறப்புக்களே.!எவ்வளவு பெரிய எதிரியையும் எமது புத்திக்கூர்மையால் சுலபமாக வெல்லலாம்.நான் வெற்றியோடு திரும்பிவருகின்றேன்!" என்று உறுதியாகக் கூறிப் புறப்பட்டது.
யானைகள் இருக்குமிடத்தை சென்றடைந்த குட்டிமுயல் யானை அரசனைப் பார்த்து "உங்களிடம் நான் தூதுவனாக வந்துள்ளேன். தூதுவனை துன்புறுத்துவதோ கொல்வதோ பாவமான செயல் என்பதை நீங்கள் அறிவீர்கள்"என்று பேச்சைத் தொடங்கியது. "சரிசரி நீ யாரின் தூதுவனாக வந்துள்ளாய்அதை முதலில்கூறு" என்று யானை அரசன் உறுமியது.
"நீங்கள் சிலநாட்களுக்குமுன்பு தங்கள் பரிவாரங்களுடன் ஒரு தடாகத்தில் நீர் அருந்த வந்தீர்கள்.அது எங்கள் சந்திரபகவானின் தடாகம்.அதில் நீங்கள் இறங்கி நீரை அசுத்தம் செய்துவிட்டீர்கள். அதனால் எங்கள் சந்திர








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் உங்கள் யானைக் கூட்டத்தின்மீது கோபமாக உள்ளார். உங்கள்மீது படையெடுக்க அவர் யோசித்துள்ளார். இதற்கு நீங்கள் என்ன பதில் கூறப் போகின்றீர்கள்?"என்று குட்டிமுயல் கூறியது.
இந்தச் செய்தியைக்கேட்டயானைகள் சித்தம் கலங்கின. எனினும் முயலின் பேச்சை நம்பாத யானை அரசன் "எங்கே உன் சந்திரபகவானைக் காட்டு பார்ப்போம்!" என்று கூறியது.
"என்னுடன் வாருங்கள் அவரைக்காட்டுகிறேன்!" என்று முயல் கூறியது.அதன்படி யானை அரசன் தன்னுடன் சில யானைகளை அழைத்துக்கொண்டு சந்திர பகவானைக் காண முயலுடன் சென்றது.
வெகுதூரம் நடந்தபின் யானைக் கூட்டத்துடன் முயல் நீர்த்தடாகத்தை அடைந்தது. அன்று பூரணச் சந்திரன் .நிலவின் ஒளி தடாகத்தில் நீர்மலமாகத் தெரிந்தது.
"இதோ எங்கள் சந்திரபகவான்!"என்று நீரில் தெரிந்த சந்திரபிம்பத்தை முயல் யானைகளுக்குக் காட்டியது. யானை அரசன் நீரில் காலை வைத்துத் தடாகத்தில் இறங்கியது. அதனால் நீர் அங்கும் இங்கும் ஆடியது. நீரில் நிர்மலமாகத் தெரிந்த சந்திரபிம்பமும் அங்கும் இங்கும் ஆடியது.
அதனைக்கண்ட யானை பயத்துடன் காலை வெளியே எடுத்துவிட்டது.
"ஐயோ எங்கள் சந்திரபகவானுக்குக் கோபம் வந்து விட்டது. என்ன நடக்குமோ தெரியாது!"என்று முயல் மிகவும் பதட்டப்பட்டவாறு கூறியது.
இதனைக்கேட்ட யானை பயமேலீட்டால் எங்களை மன்னித்துவிடும்படி அவரிடம் கூறு. இனிமேல் நானும் எனது கூட்டமும் இந்தத் தடாகத்தின் பக்கமே வரமாட்டோம் என்று முயலிடம் கூறிவிட்டு தமது பாரமான ,உடல்களை சுமந்துகொண்டு ஒரே ஓட்டமாக ஓடி மறைந்தன.
குட்டிமுயல் தனதுகூட்டத்தினரிடம்சென்று மகிழ்ச்சியோடு நடந்ததைக் கூறியது.குட்டி முயலின் புத்திக்கூர்மையால் எதிரியை எளிதில்வென்றதைஎண்ணி மற்றைய முயல்கள் அதனை ஆரத்தழுவி முத்தங்கள் கொடுத்து தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்தன.
தம்பி தங்கைகளே புத்திமான் பலவான் என்ற முதுமொழியை இந்தக் கதைமூலம் அறிந்திருப்பீர்கள் என் நம்புகிறேன்.

-புஷ்பா அக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி எண்: 3.

நீங்கள் பலநாடுகளைப்பற்றி அறிந்திருப்பீர்கள். உங்களில் பலர் மற்றையநாட்டு தபால் அட்டைகளைக் கூடச் சேகரித்திருப்பீர்கள். சில வெளிநாடுகளிலிருந்து வந்த தபால் அட்டைகள் இவை.
எது எந்தநாட்டைச் சேர்ந்தது என்று கண்டு பிடிக்கமுடியுமா உங்களால்?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி எண்: 4.

இந்தமனிதர் எதைக்கண்டு இப்படி மரத்திற்குப் பின்னால் ஒளிந்துகொண்டிருக்கிறார்? எண்களை இணைத்து அதைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.



சரியான விடைகளும் உங்களில் சரியான விடைகளை எழுதியவர்களின் பெயர்களும் உங்களில் அதிர்ஷ்டசாலி யார் என்பதும் அடுத்த இதழில் வெளியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவருடம்

புலரும் பொழுதினிலே
புத்தாண்டே பிறக்கட்டும்
புதுப்பொலிவு பெற்று
புனிதத்துவம் அடையட்டும்
புண்ணியம் தேடட்டும்
புகழ்மாலை சூடட்டும்
புத்துயிர் பெற்று
புளகாங்கிதம் அடைந்து
புதுவாழ்வு மலரட்டும்!

-ஆன் வினோலினி நடேசன்.

## கர்த்தர் பிறந்தார்

ஒவ்வொரு ஆண்டுகளாய்
உத்தமனாய் வந்துதித்து
உலகத்திற்கு உயர்ந்தவராய்
அன்புகொண்டவராய்
பாவிகளின் மீட்பனுமாய்
யேசுபாலன் மானிடனாய்
மார்கழிக் குளிரினில்
மரியாளின் மடியினில்
மகிமையின் இறைமகனாய்
மண்ணில் பிறந்தார்
துன்பம் நிறைந்த எம்வாழ்வில்
அன்பும்அறமும் பகிர்ந்திட
தூய்மை விளங்கும் எம்மனதில்
புனிதவாழ்வைப் பெற்றிட
கர்த்தராய் வந்து பிறந்தாரே
பொலிவுடன் எம்மண்ணும் மலர்ந்திட
குழந்தை யேசுவின்
அருளைப் பெற்றிடுவோம்.
புத்தாண்டுடன்
நன்மையே விளையட்டும்.

-திருமதி ஜெயா நடேசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியுங்கள்!

# பூவரசு

இனியதமிழ் ஏடு.

'எங்கள் இளந்தளிர்கள்
இளையோர்க்கான சஞ்சிகையும்
இணைந்துவருகிறது.

"நாம்வாழத் தமிழ் வாழும்
தமிழ்வாழ நாம் வாழ்வோம்!"

வெளியீடு:
பூவரசு கலை இலக்கியப் பேரவை
ஜேர்மனி.

முகவரி:
Poovarasu
Sinniah Maheswaran,
Otto Brenner Allee 56,
28325 Bremen,
Germany.



உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம்சொந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org